Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 26 thalaivaasaltv@gmail.com ஞாயிற்றுக்கிழமை ஒக்ரோபர் 25, 2020

## இன்று 263 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் மேலும் 263 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பேலியகொடை மீன் சந்தையை சேர்ந்தவர்களுடன் தொடர்புடைய 227 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், தனிமைப் படுத்தப்பட்டிருந்த 36 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எமது உயிருக்கு உலை வைக்காதீர்கள்!

### கோப்பாய் மக்கள் கோரிக்கை



யாழ். கோப்பாய் கல்வியியற்கல்லூரியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தை சுற்றியுள்ள பிரதேசங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் சுகாதார அமைசரசின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்,

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரியில் தற்போது கொரோனா தனிமைப்படுத்தல் முகாம் அமைக்

03

## தனிமைப்படுத்தல் பகுதிகளிலிருந்து வடக்கிற்கு வருபவர்கள் தனிமைப்படுத்தப்படுவர்



நாட்டின் தென் பகுதிகளில் தனிமைப்படுத்தல் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்களிலிருந்து வடக்கு மாகாணத்துக்கு வருகை தருவோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்படுத்தப்படுவார்கள் என்று சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கம்பஹா மாவட்டம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் சில பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

03



## நாடளாவிய ரீதியில் புகையிரத சேவைகள் முடக்கம்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான சிறப்பு தொடருந்து சேவையைத் தவிர, பிரதான புகையிரதப் பாதை, புத்தளம் பாதை மற்றும் களனி பாதை ஆகியவற்றில் இடம்பெறும் அனைத்து தொடருந்து சேவைகளும் நாளை முதல் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

03

## கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கான பேருந்துகள் நிறுத்தம்

இன்று பிற்பகல் முதல், புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு, இலங்கை போக்குவத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபடமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து

03

## கைக்குண்டு வெடித்ததில் இரு சிறுவர்கள் படுகாயம்

### வவுனியாவில் சம்பவம்



வவுனியா, இரணை இலுப்பைக்குளம் பகுதியில் கைக்குண்டு வெடித்து இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இரணை இலுப்பைக்குளத்தில் வசிக்கும் பாட்டி தனது இரு பேரப்பிள்ளைகளுடன் வீட்டுக்கு அண்மித்த சிறிய காட்டுப் பகுதியில் விறகு சேகரித்துக் கொண்டு நின்றுள்ளார். இதன்போது பாட்டியுடன் சென்ற இரு சிறுவர்களும் மரம் ஒன்றின் அருகில் நின்று விளையாடிக் கொண்டு

03

## கொழும்பு கோட்டை உள்ளிட்ட இடங்களில் ஊரடங்கு அமுல்

கொழும்பு மாவட்டத்தில், கோட்டை, புறக்கோட்டை, பொரளை, வெலிக்கடை முதலான காவல்துறை அதிகார பிரதேசங்களில் இன்று மாலை 6 மணிமுதல் மீள் அறிவித்தல் வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal
ஞாயிற்றுக்கிழமை, ஒக்ரோபர் 25, 2020

## பாரத பிரதமர் - தமிழ் தேசியக் கூட்டமைப்பு இடையிலான கலந்துரையாடல்

# காலவரையின்றி ஒத்திவைப்பு



பாரத பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இடையிலான கலந்துரையாடல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடுவதில் பிரதமர் நரேந்திர மோடி ஆர்வமாக இருந்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய இக்கட்டான நிலையில் எந்த நேரத்தில் விவாதம் நடைபெறுமா என்பது குறித்து தெளிவான முடிவு எட்டப்படவில்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமருடனான பேச்சுவார்த்தைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் இந்தக் கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாரத பிரதமரால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஒன்லைன் கருவிகளைப் பயன்படுத்தியா அல்லது பாரத பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதா என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எந்த விடயம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடுவது என்பது தொடர்பாகவும் இன்னும் இறுதி செய்யவில்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

## களுத்துறையில் 5 கிராமங்களுக்கு போக்குவரத்து கட்டுப்பாடு

களுத்துறை- மீகஹதென்ன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 5 கிராமங்களுக்குப் போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேதவத்த, மகாலந்தாவ தெற்கு, மகுருமஸ்வில, குலா விட்ட வடக்கு மற்றும் குலாவிட்ட தெற்கு ஆகிய 5 கிராமங்களுக்கே இவ்வாறு போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், தொடங்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெபிலியவத்த கிராமத்திலும் சுமார் 50 வீடுகளுக்குப் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் தொடர்பான அறிக்கைகளை கவனத்திற்கொண்டே குறித்த கிராமங்களுக்குப் போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## பேருந்து சாரதிகள், நடத்துனர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை?



வவுனியாவில் இருந்து நெடுங்கேணியூடாக முல்லைத்தீவுக்கு சேவையில் ஈடுபட்ட பேரூந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துனர்களை பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ளுமாறும் வவுனியா வடக்கிற்கு பொறுப்பான பொதுசுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணி பகுதியில் வீதி திருத்தப்பணியில் ஈடுபட்டவர்களில் 12பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் சிலர் 12,13 மற்றும் 14 ஆம் திகதிகளில் வவுனியாவில் இருந்து நெடுங்கேணியூடாக முல்லைத்தீவு செல்லும் பேரூந்துகளில் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

எனவே, குறித்த திகதிகளில் காலை 5 மணியில் இருந்து காலை 10 மணிவரையான காலப்பகுதியில் நெடுங்கேணியூடாக முல்லைத்தீவு வழித்தடத்தில் பயணம் மேற்கொண்ட பேரூந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் உடனடியாக பொது சுகாதார பரிசோதகர்களை தொடர்புகொண்டு, தமக்கான பி.சி.ஆர்.பரிசோனைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதுடன் அவர்கள் தம்மை சுய தனிமைப்படுத்தலுக்குள்ளாகுமாறும் கோரியுள்ளனர்.

இதேவேளை குறித்த திகதிகளில், இந்த நேரத்தில் இப்பேரூந்துகளில் பயணம் செய்த பயணிகளும் தமது பகுதி சுகாதார பரிசோதகர்களை தொடர்புகொண்டு, தம்மையும் பரிசோதனைக்குட்படுத்திக் கொள்ளுமாறும் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் உயர்தரம் கற்கும் மாணவன் சடலமாக கண்டெடுப்பு!

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியிலிருந்து மாணவன் ஒருவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன், கட்டைக்காடு பகுதியிலிருந்து திருமண நிகழ்வொன்றுக்காக தருமபுரத்திற்கு நேற்று சென்றிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த திருமண நிகழ்வுக்குச் சென்று, அன்றிரவு முழுவதும் வீடு திரும்பாததால் மாணவனை உறவினர்கள் தேடிவந்த நிலையில் கிணறு ஒன்றிலிருந்து நேற்று மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர், தருமரபுரம் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மோகநாதன் தர்சன் (வயது-18) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவம் கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் தருமபுரம் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கொழும்பு மெனிங் சந்தைக்கு நவம்பர் வரை பூட்டு!




கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக கொழும்பு மெனிங் சந்தை நவம்பர் முதலாம் திகதிவரை மூடப்படவுள்ளதாக மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மெனிங் சந்தை மூடப்பட்டும் என ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் தற்போது இந்தப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியை அடுத்து பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில், மினுவாங்கொட கொரோனா கொத்தணியை அடுத்து ஏற்பட்டுள்ள கொரோனா அலையில், தற்போது பேலியகொட மீன் சந்தையில் ஏற்பட்ட வைரஸ் பரவல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொற்று பரவக் காரணமாகியுள்ளது.

இந்நிலையில், குறித்த மீன் சந்தையுடன் தொடர்புபட்ட தொற்று கண்டறியப்பட்ட காலி மற்றும் பேருவளை மீன்பிடித் துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன.

இதையடுத்து, கொழும்பில் பிரதான மக்கள் புளக்கம் அதிகமுள்ள மெனிங் சந்தையை மூடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் கொரோனா சமூகப்பரவலாக மாறவில்லையா?

பொலிஸ் புலனாய்வுத் துறை அதிகாரிக்கு கொரோனா வந்திருப்பது சமூகப் பரவல் இல்லையா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தனது ருவிட்டரில் அவர் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை தமிழில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'நாடாளுமன்றத்தின் பொலிஸ் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இருப்பினும், கொரோனா இன்னும் சமூக பரவல் நிலையை எட்டவில்லை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி கூறிவருகின்றமை உண்மைக்கு புறம்பாகத்தானே உள்ளது?' என கேள்வியெழுப்பியுள்ளார்.

# மின்கம்பங்களுள் மறைத்து வைக்கப்பட்ட வாள்கள் மீட்பு



கிளிநொச்சி பளை முல்லையடி பகுதியில் மறைத்து வைக்பட்டிருந்த மூன்று வாள்கள் இன்று பளை பொலிசாரால் மீட்க்பட்டுள்ளள.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முல்லையடிபகுதியில் இருந்து மேற்படி வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஏ9 வீதிக்கு அருகாமையில் மின்சார இணைப்புக்களுக்காக அங்கு அடுக்கப்பட்டிருந்த மின்கம்பங்களுக்கு இடையில் பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் குறித்த வால்கள் மீட்கப் பட்டுள்ளன.

அவை எதற்காக அங்கு மறைத்து வைக்கப்பட்டன என என்பது தொடர்பில் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித் துள்ள்னர்.

இதேவேளை குறித்த பகுதியில் அண்மையில் தான் குறித்த மின் கம்பங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் ஏதேனும் குற்ற செய லிற்கான திட்டமிடல்கள் இடம் பெற்றிருக்கலாம் என பொலிசார் சந் தேகிக்கின்றனர்.

# தனிமைப்படுத்தலில் இருந்தவருக்கு கள் விற்ற காசில் மதுபானம் வாங்கியவரால் உரும்பிராயில் மதுபான சாலைக்கு சீல்

யாழ்.கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு நேற்று (24/10) கள் விற்று அந்த காசில் உரும்பிராயில் உள்ள மதுபான சாலையில் மதுபானம் வாங்கிய நபரால் குறித்த மதுபான விற்பனை நிலையம் பூட்டப்பட்டுள்ளதுடன், அங்கு பணி யாற்றியவர்கள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, கொரோனா தலைமைப் படுத்தல் நிலையமான கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி செயற்பட்டுவரும் நிலையில் வெளி மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அங்கு சுயதனிமைப் படுத்தலுக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர்

இந்நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நபர் ஒருவர் கல்வியியற் கல்லூரி சுற்றாடலில் உள்ள ஒருவருடைய தொடர்பை எடுத்து மதில் வழியாக கள்ளு வாங்கியுள்ளார். இந்த சம்பவத்தில் சம்மந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில்,

தேசிய கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவருக்கு கள் விற்பனை செய்த பணத்தில் உரும்பிராய் சந்தியில் உள்ள மதுபான நிலையத்தில் மதுசாரம் வாங்க சென்றுள்ளதை ஒத்துக் கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் பொதுச் சுகாதார பரிசோதகரும் பொலிசாரும் இணைந்து கொரோணா முன் எச்சரிக்கை நடவடிக் கையாக குறித்த மதுபான நிலையத்தை மூடியதுடன் அங்கு கடமையாற்றுப வர்களை சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

# வவுனியா வளாக வியாபார பீடத்தின் ஆய்வு மாநாடு

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபார பீடத்தின் ஆய்வு மாநாடு நாளை தொடங்குகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக, வியாபார கற்கைகள் பீடத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு நாளை 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது. வவுனியா - மன்னார் வீதி, பம்பைமடுவில் அமைந்துள்ள வியாபார கற்கைகள் பீடத்தில், பீடாதிபதி கலாநிதி வை. நந்தகோபன் தலைமையில் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளதுடன், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சம நேரத்தில் சூம் செயலி மூலம் ஒன்லைனிலும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடத்துக்கான ஆய்வு மாநாட்டில் வியாபார நிலைமாற்றத்தில் கீழைத்தேய - மேலைத்தேய இணைவு (Business Transformation: Merging the West and the East) என்ற கருதுகோளின் கீழ் 19 உப பிரிவுகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அதிதிப் பேச்சாளர்களாக மொரட்டுவ பல்கலைக்கழக வியாபார கற்கைகள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.டபிள்யூ.எஸ். பி. தசநாயக்க, ஆஸ்திரேலியாவின் மர்டொக் பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்பம், கணிதப் புள்ளிவிபரவியல் பேராசிரியர் தனியா மக் கில் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இரண்டாவது தமிழ்த் துணைவேந்தரும், இலங்கையிலுள்ள துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் அமையத்தின் தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் எஸ். ஏ. அரியதுரை பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும், வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வுகளின் இணைப்பாளராக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. ருக்ஷன் செயற்படவுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## எமது உயிருக்கு...

கப்பட்டுள்ளது. கடந்த 20 ஆம் திகதியில் இருந்து பலர் அங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இதுவரை 3 பேர் வரையில் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம்.

கடந்த முறை இதே போன்று தனிமைப்படுத்தல் முகாமினை அமைப்பதற்கு கிராம மக்களாகிய நாம் எமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தோம். ஆனால் இம்முறை நாடுமுழுவதும் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுவரும் காரணத்தினால் மனிதாபிமான அடிப்படையில் எமது எதிர்பினை காட்டாமல் அமைதியாக இருந்தோம். குறித்த பகுதியை சுற்றியுள்ள அயல் கிராமங்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் வராது என நாம் நம்பியிருந்தோம்.

ஆனால் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களால் நம்பிக்கை இழந்துள்ளோம். தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தப்பிச்செல்ல முயன்றதாகவும், அயலில் உள்ளவர்களுடன் சட்டவிரோத மதுபான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிந் துள்ளோம்.

இது எமக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. தற்போது எமது பிரதேசத்துக்கு வருவதற்கும் ஏனையவர்கள் அச்சப்படுகிறார்கள். நாளடைவில் ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்படுவோமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நின்மதியாக வீதிகளில் நடமா முடியலவில்லை பெரும் மன உழைச்சலுக்குள்ளாகியுள்ளோம்.

மனிதபிமான ரீதியில் நாம் ஒத்துழைப்பு வழங்கியதற்கு எமக்கு தொற்று நோயையா பரிசாக வழங்கப்போகிறீர்கள். அமைதியாக வாழ்ந்த வாழ்வை சீரழித்துவிட்டதாகவே எண்ணுகிறோம். எனவே உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அந்தவகையில்

1. தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வெளியில் உள்ளவர்களுடன் தொடர்பினை பேனாதவாறு சுற்றுவட்டாரத்தில் பாதுகாப்பை பலப்படுத்தல் மற்றும் தொடர்பினை பேணுபவர்களுக்கு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல்

2. தனிமைப்படுத்தப்பட்டவர்களுடன் தொடர்பினை பேணுபவர்கள் உரிய பாதுகாப்புகள் மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் வெளியில் நடமாடுவதை தடுத்தல்

3. மேலும் சுகாதாரத்துறையினர் தொற்று நீக்கல் செயற்பாடுகள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை சுற்றுவட்டாரத்தில் முன்னெடுக்க வேண்டும்.

4. மேற்குறித்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருப்பின் இப்பகுதியில் இருந்து உடனடியாக இந்த தனிமைப்படுத்தல் நிலையத்ததை அகற்ற வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்." என்றுள்ளது.

## தனிமைப்படுத்தல்...

கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனை தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பகுதிகளில் வடக்கு மாகாணத்துக்கு வருகை தருவோர் அவர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பான அறிவுறுத்தல் ஒவ்வொரு பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக செயற் படுமாறும் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு வருகை தருவோர் தொடர்பான தகவல்களை 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கைக்குண்டு...

நின்றுள்ளனர்.

இதன்போது மரத்தின் அடியில் மண்ணில் புதையுண்டு கிடந்த கைக்குண்டு ஒன்றை எடுத்த சிறுவர்கள் அதனை தட்டி விளையாடிய போது அது வெடித்து சிதறியது. அதில் இரு சிறுவர்களும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 மற்றும் 11 வயதுடைய இரு சிறுவர்களே இவ்வாறு காயமடைந்தவர்களாவர். இது தொடர்பில் இரணை இலுப்பைக்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நாடளாவிய...

அத்துடன், கொல்லுப்பிட்டி புகையிரத நிலையம் வரையான கடலோர புகையிரத பாதையில் 6 தொடருந்து சேவைகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு கோட்டையில் இருந்து பயணிக்கும் காலி இரவு நேர தபால் புகையிரதத்ததை தவிர்ந்த ஏனைய அனைத்து தபால் புகையிரத பயணங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோட்டை பகுதிக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பிலிருந்து...

சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

கோட்டை, புறக்கோட்டை உள்ளிட்ட சில காவல்துறை அதிகார பிரதேசங்களில் இன்று மாலை 6 மணிமுதல் மீள் அறிவித்தல்வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்படவுள்ள நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், பேருந்து சேவை தொடர்பில் நாளை தினம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் இலங்கை போக்குவரத்த சபைத் தலைவர் தெரிவித்துள் ளார்.

## கொழும்பு கோட்டை...

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் அமுலாக் கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், மறு அறிவித்தல்வரை அவ்வாறே தொடரும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

# நல்லூர் முருகன் ஆலயத்தில் மானம்பூ உற்சவம்







விஜயதசமி நாளான இன்றைய தினம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயத்தில் மானம்பூ உற்சவம் விமர்சையாக இடம்பெற்றது.

காலை 6.45 க்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று முருகப்பெருமான் குதிரை வாகனத்தில் எழுந்தருளி மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.

தற்காலச் சூழ்நிலைக்கு அமைய ஆலயத்தில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி அமைதியான முறையில் சிறப்பாக மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.

பக்தர்கள் சுகாதார இடைவெளிகளை பின்பற்றி இடைவெளியுடன் நின்று தரிசனம் செய்தமை குறிப்பிடதக்கது.

**படங்கள் - ஐ.சிவசாந்தன்**

## கண்டி மத்திய சந்தை மீன் கடைகளுக்கு பூட்டு



கண்டி மத்திய சந்தை தொகுதயிலுள்ள மீன் விற்பனை நிலையங்களையும் தற்காலிகமாக மூடி வைக்க கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பேலியகொட உள்ளிட்ட பல இடங்களிலிருந்து கண்டி சந்தைக்கு மீன் விற்பனைக்காக கொண்டு வரப்படுவதால், தொற்று பரவ வாய்ப்புள்ளதை கருத்திற் கொண்டே இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக கண்டி நகர ஆணையாளர் அமில நவரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சந்தைத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பிசிஆர் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த பரிசோதனையின் முடிவுகளுக்கமைய வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமென, அவர் தெரிவித்துள்ளார்.

## மீன் வாங்கினால் நன்றாகச் சமைத்துச் சாப்பிடலாம்

நன்கு சமைத்த மீன் ஊடாக கொரோனா பரவாது என்ற விஞ்ஞான பூர்வமான ஆதாரத்தினை சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது என பதில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சதாசிவம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதேவேளை கோட்பாட்டு அடிப்படையில் எந்த ஒரு மேற்பரப்பிலும் கொரோனா வைரஸ் காணப்படும் என்பதால் சமைப்பதற்கு மீனை தயாரிக்கும் போது அல்லது சேமித்து வைக்கும் போது முகத்தை கைகளால் தொடுவதை தவிர்ப்பதுடன் சமையல் பாத்திரங்கள் மற்றும் கரங்களை நன்கு கழுவி கொள்ளுதல் வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அடிப்படையற்ற விதத்தில் மீன் சந்தைகளை மூடுவது அனாவசியமாகும். ஆகையால் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நெறிமுறையான முகக் கவசம் அணிதல் சமூக இடைவெளியை பின்பற்றுதல் மற்றும் கைகளை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல் ஆகியவற்றை இறுக்கமாக பின்பற்றி மீன் சந்தை தொடர்ந்து நடத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## களுபோவில வைத்தியசாலையில் ஆறு ஊழியர்களுக்கு கொரோனா

களுபோவில வைத்தியசாலையின் 6 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவு, 23 ஆவது வார்டு, 7 ஆவது வார்டு மற்றும் வெளிநோயாளர் பிரிவு நேற்று (24) தற்காலிகமாக மூடப்பட்டது.




வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவு, 23 ஆவது வார்டு, வெளி நோயாளர் பிரிவு ஆகியன கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக களுபோவில வைத்தியசாலையில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஊரடங்கு உத்தரவை மீறியதாக
# 24 மணி நேரத்தில் 165 பேர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 165 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 30 வாகனங்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட கடந்த நான்காம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 924 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 104 வாகனங்கள்



பொலிசாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் தனிமைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள பொலிஸ் அதிகாரப் பிரிவுகளில் கடமைக்காக விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## வைத்தியருக்கு கொரோனா
### 13 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட ஹங்குராங்கெத்த ரிக்கிலகஸ்கட ஆதார வைத்திய சாலையில் பணியாற்றி வந்த வைத்தியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவரது குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்களாக 13 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று, நுவரெலியா மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.பி.புஸ்ப குமார தெரிவித்தார்.

## சில சலுகைகளுடன் கம்பஹாவில் தொடர்ந்தும் ஊரடங்கு நீடிப்பு

கம்பஹா மாவட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரங்கு சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நாளைய தினனம் அத்தியவசிய உணவு பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் மற்றும் மருந்தகங்களை திறந்து வைக்கப்படும் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

காலை 8 மணி முதல் 10 மணி வரையில் இவ்வாறு திறந்து வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நாளை தினம் அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிகளும் திற்ந்து வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.